**<u>நாள் 12.06.2023.</u>**

**<u>OS 81/2019 பி.சா1 சாட்சி சூசைராஜ் மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

நான் விவசாய வேலை செய்கின்றேன். நான் என்னுடைய இடத்தில் சொந்த பயிர் சாகுபடி செய்கின்றேன். என்னுடைய இடங்கள் வல்லம் வடக்கில் இருக்கிறது. 2 1/2 ஏக்கர் நிலம் உள்ளது அதன் புலஎண் ஞாபகமில்லை. எனக்கு வருட வருமானம் ரூ2 இலட்சம் இருக்கும். 2ம் பிரதிவாதி என்னுடைய இரண்டாவது மனைவி. 2ம் பிரதிவாதி வீட்டுக்குடித்தனம் அவருக்கு தனியாக வருமானம் இல்லை. எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். எனக்கு முதல்மனைவி மூலமாக 2 பெண்குழந்தைகள், 2 வது மனைவி மூலமாக 2 மகன்கள். ஒரு மகன் 11th ம் ஒரு மகன் கல்லூரியிலும் படிக்கிறார்கள். வழக்கு சொத்துக்களில் 1, 2, 3 அயிட்டம் தஞ்சாவூரிலும் 4 வது அயிட்டம் நீலகிரி வட்டத்திலும் உள்ளது. எனக்கு பணத்தேவை இருந்தது என்றால் சரிதான். அந்த பணத்தேவைக்காக சொத்துக்களை விற்கலாம் என்று நான் முடிவு செய்யவில்லை. என்னுடைய சொத்துக்கள் எதையும் நான் விற்கவும் இல்லை விற்க ஒப்பந்தமும் செய்யவில்லை. என்னுடைய பணத்தேவையை என்னுடைய வருவாயை வைத்துதான் பூர்த்திசெய்துகொண்டேன். எனக்கு யாரிடமும் வெளியில் பணம் வாங்க வேண்டிய அவசியமோ, சொத்தை விற்க வேண்டிய அவசியமோ ஏற்படவில்லை. என் மீதோ என் மனைவி மீதோ வழக்குகள் இருந்ததா என்றால் பட்டுக்கோட்டையில் முன்பு இருந்தது. ஜெயக்குமார், நாடிமுத்து இருவரும் ஏற்கனவே ஒரு சொத்தை நான் விற்பதாக ஒப்பந்தம் போட்டது சம்பந்தமாக பட்டுக்கோட்டையில் வழக்கு தொடர்ந்தார். விசாரணை நீதிமன்றத்தில் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பானது நான் மேல்முறையீடு செய்திருக்கிறேன். நான் அவர்களுக்கு பணம் வாங்கும்போது கொடுத்த பேப்பர் முழுவதையும் வாங்கிகொண்டோம். என்னிடமிருந்து பெற்ற 3 காசோலைகளை திருப்பி தராமல் வைத்துக்கொண்டு வழக்கு தாக்கல் செய்தார்கள். கிரய ஒப்பந்தத்தின் பேரில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். கிரய ஒப்பந்தம் எழுதிதரவில்லை என்றும் கடன் வாங்கினேன் என்பதுதான் என்னுடைய கட்சி. மாதாகோட்டை பஞ்சாயத்து தலைவர் மூலம் பஞ்சாயத்து பேசினோம். சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பு பஞ்சாயத்து பேசினோம். நாங்கள் ஒருமுறை போய் பேசினோம் நான் இல்லாதபோது பிரதிவாதி ஒருமுறை போய் பேசிஇருக்கிறார் அப்போது அவர் எதற்கும் ஒத்துவரவில்லை. நான்

கடன் வாங்கினேன் என்று காட்டுவதற்கு என்னிடம் ஆதாரம் இல்லை. பணத்தில் ஒருபகுதி நான் வாதிக்கு கொடுத்துவிட்டேன் என்று சொல்வதற்கும் என்னிடம் ஆதாரம் எதுவும் இல்லை. ஒரு மாதத்திற்கு ரூ8 இலட்சம் வட்டி என்று காட்டுவதற்கும் என்னிடம் ஆதார ஆவணம் எதுவும் இல்லை. நான் 8 இலட்ச ரூபாயை ரொக்கமாக கொடுத்தேன். நான் 41 இலட்சம் கடன் வாங்கினேன். முதன்முதலில் வாதி ரூ8 இலட்சம் பணம் கொடுத்தார் அதை நான் அன்றைக்கே அவரிடம் திருப்பி கொடுத்துவிட்டேன். அன்றைக்கே அவரிடம் திருப்பி கொடுத்ததற்கு ஆதாரம் எதுவும் வாங்கவில்லை. ரூ5 இலட்சம் ஒரு காசோலை வாதியிடம் கொடுத்தேன். அவ்வாறு அவர் கொடுத்தற்கு அதனை அவர் பணமாக்கி கொண்டதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் வாதிக்கு ரூ.27,75,000/-மட்டும் தரவேண்டும் என்றும் அதனை திருப்பி தரும்போது ஆவணங்களை கொடுத்துவிடுவதாக உறுதிஅளித்ததாக கூறுவதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. நான் இவற்றை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மாதம் மாதம் வட்டி கொடுத்ததாக சொல்கிறேனா என்றால் ஒரு மாதம் வட்டியை எடுத்துக்கொண்டு அவர் கொடுத்தார். அடுத்த மாதம் அசல் கொடுக்கும்போது அவர் வாங்க வரவில்லை. அது 2017 ம் ஆண்டில் நடந்தது. தேதி ஞாபகமில்லை. பணத்தை வாங்கி கொள்ள சொல்லி வாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. அதற்காக வழக்கும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்தபின்னரும் இந்த வழக்கிலும் நான் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை. என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலம் பத்தி 10ல் நான் மாதம் மாதம் வட்டி செலுத்திவந்ததாகவும் பின்னர் கூடுதலாக 2 பைசா வட்டி தர வலியுறுத்தினார் என்று சொல்லியிருக்கிறேன் அது தவறு. வாதி கூடுதல் வட்டி கேட்டதாக சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியது சரி. அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் நான் இவ்வளவுதான் பணம் வாங்கியிருக்கிறேன் அதை எப்போது வேண்டுமானாலும் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். 4 மாதம் நான் அவகாசம் கேட்டு இருந்ததாகவும் அதற்கு வாதி ஒப்புக்கொண்டதாகவும் முதல்விசாரணையில் சொல்லியிருக்கிறேன் ஆனால் அவ்வாறு நான் 4 மாதம் அவகாசம் கேட்கவில்லை. நான் வாதிக்கு அறிவிப்பு அனுப்பிய தேதி ஞாபகமில்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை வாதி பெற்றுக்கொண்டார். அறிவிப்பு எந்த தெருவில் எந்த கதவு எண்ணும் குறிப்பிடாமல் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பு அனுப்பிய சமயத்தில்

வாதியின் பெயர் டேவிட் மட்டும்தான் எனக்கு தெரியும். அதனால் ஜார்ஜ்டேவிட் என்று அனுப்பவில்லை. அந்த அறிவிப்பு **பிசாஆ 4**. அந்த அறிவிப்பை வாதி கையொப்பம் இட்டு பெறவில்லை. சுமதி என்பவர் கையொப்பம் இட்டுள்ளார் அந்த சுமதி ஞானமுத்து காம்ளக்சில் வேலை பார்ப்பவர். வழக்கறிஞர் அறிவிப்பில் 3 மாதம் அவகாசம் கேட்டு இருக்கிறேனா என்றால் நான் அவகாசம் கேட்கவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் பல வழக்குகளை வாதி அவருக்கு தெரிந்தவர்கள் மூலம் தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன். ஆனால் அந்த விவரங்கள் பற்றி எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்குகளின் எண் மட்டும் சொல்லவில்லை. மற்ற விவரங்கள் சொல்லியுள்ளேன். 2 காசோலைகளை பயன்படுத்தி ஆரோக்கியதாஸ் பெயரில் தஞ்சாவூரில் ரூ50 இலட்சத்திற்கு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். நன்னிலத்தில் அன்புசெழியன் பெயரில் என் பெயரில் ரூ.3 இலட்சத்திற்கு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு எண் தெரியாது. திருவாரூரில் ஜேசுதாஸ் பெயரில் பிராமசரி நோட்டில் மூலம் ரூ.5 இலட்சத்திற்கு ஒரு வழக்கு போட்டார். திருவாரூர் கோர்ட்டில் என் மனைவி பெயரில் ரூ5 இலட்சத்திற்கு ஒரு வழக்கு போட்டார். அந்த வழக்குகளின் எண்ணும் நீதிமன்றங்களின் பெயரும் எனக்கு தெரியாது. தஞ்சாவூரில் என் மனைவி பெயரில் ரூ.25 இலட்சத்திற்கு ஆரோக்கியமேரி வழக்கு போட்டுள்ளார். வழக்கு விவரப்பட்டியல் அவ்வளவுதான். இந்த விவரங்கள் என்னுடைய எதிர்வழக்குரையில் இல்லை.

மாலை 5.30 மணி ஆகிவிட்டதால் வாதிதரப்பு வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-A. மலர்விழி)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.